**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 320/2011 c/w 296/2011**
**நாள்.18.12.2023**
**வா.சா.1- ராமசாமி**
**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

சர்வே எண்.2259 என்பது நத்தம் புறம்போக்கு என்றால் சரிதான். சர்வே எண். 2258/2F எனது நிலம். சர்வே எண். 1887/1A நிலம் யாருடையது என்றால் என்னுடைய நிலம். முத்துச்சாமிக்கு பாத்தியப்பட்ட நிலங்களின் சர்வே எண் எனக்குத் தெரியாது. சர்வே எண். 1887/1A நிலத்திற்கு அடுத்து கிழக்குப்பக்கத்தில் உள்ள நிலங்கள் முத்துச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்துச்சாமிக்கு நிலங்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது எனக்குத் தெரியாது. நத்தம் புறம்போக்கு சர்வே எண்.2259 வழியாக வந்து சர்வே எண்.2258/2F மற்றும் தங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.1887/1Aன் வழியாக வந்து பிரதிவாதி முத்துச்சாமி அவரது நிலத்திற்கு சென்று வருகிறார் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சர்வே எண். 2259 வழியாக தான் பிரதிவாதி முத்துசாமி அவரது நிலத்திற்கு சென்று வர முடியும் என சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்ட போது முத்துச்சாமி நிலங்களுக்கு சென்று வர உள்ள வேறு பாதையை காண்பித்தேனா என்றால் நான் சொல்லவில்லை. பிரதிவாதிக்கு நத்தம் புறம் போக்கு மற்றும் எனது நிலத்தின் வழியாக மட்டும் தான் பாதை உள்ளதால் பாதையை விட நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் பாதை ஏதும் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN
**Principal District Munsif**
**Vedasandur**